OS 174/2024

வா.சா.1 சேகர் த/பெ சந்திரசேகர்

நாள் 13.10.2025

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. நீதிமன்றத்தில் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாண்டு மூலம் பணம் வாங்கியிருந்தார் அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சர்வேயர் ஆக இருந்து 2013ல் ஓய்வு பெற்றுவிட்டேன். பிரதிவாதியின் தந்தை வெங்கடேசனை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியின் தந்தை என்னிடம் கடன் வாங்குவாரா என்றால் கடன் வாங்கியிருக்கிறார் திருப்பி கொடுத்து இருக்கிறார். வெங்கடேசன் எப்போது கடன் வாங்கினார் என்றால் 2013ம் வருடத்திற்கு முன்பு கடன் வாங்கினார். அவர் இறப்பதற்கு முன்பும் வாங்கினார். 2013ம் வருடம் நான் ஓய்வு பெறுவதற்கு முன்பே அரசாங்க ஊழியர் என்று இருந்த நிலையில் வட்டிக்கு கடன் கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம். அரசாங்க ஊழியர் கடன் வாங்குவதற்கும் கடன் கொடுப்பதற்கும் முன்பாக அவரது உயர் அதிகாரியிடம் அனுமதி வாங்க வேண்டும் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு 30.09.2024 ம் தேதி அனுப்பிய அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அறிவிப்பில் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது எந்த இடத்தில் பாண்டு எழுதப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான்.

2. வழக்குரையில் உள்ள விவரங்களை படித்து பார்த்த பிறகு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணப்பட்டியலில் 31.10.2023 தேதியிட்ட எ மற்றும் பி பாண்டு என்று விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது 31.10.2021 தான் பாண்டு எழுதப்பட்டுள்ளது. நான் வழக்குரையை முழுவதுமாக படித்து பார்த்து இருந்தால் மேற்படி தவறு விவரம் எனக்கு தெரியவந்து இருக்கும் என்றால் நான் படித்து பார்க்காமல் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் அதே தேதியில் பிரதிவாதி 40 ஆயிரம் கேட்டதாகவும் என்னிடம் 39 ஆயிரம் தான் இருந்தது அதை கொடுத்தேன் என்று சொல்லியிருக்கும் விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. பாண்டில் சாட்சி போட்டவர்கள் கே.ஆர்.சங்கர், ஜி.முருகன் ஆகியோர் ஆவார்கள். மேற்படி சாட்சிகள் எனது ஊரை சார்ந்தவர்கள்.

3. மற்றொரு பாண்டான ரூ.39 ஆயிரத்திற்கான பாண்டிலும் அதே சாட்சிகள் தான் கையெழுத்து போட்டார்கள் என்றால் ஆமாம். 2 பாண்டுகளையும் யார் எழுதியது என்றால் பழனி என்பவர் எழுதினார். அவரும் எனது ஊரை சார்ந்தவர் தான். பிரதிவாதி எங்கள் ஊரில் வந்து என் வீட்டில் வைத்து பணம் வாங்கியதாக வழக்குரையில் விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. பாண்டில் உள்ள சாட்சிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு என்னை தெரியாது என்றாலும் பிரதிவாதியின் தந்தை என்னிடம் வாங்கிய கடன் பைசல் ஆகி மேற்படி பாண்டுகளை திருப்பி தராமல் அதை பயன்படுத்தி பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடியாக போட்டு எனக்கு ஆதரவான சாட்சிகளை போட்டு தவறான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இல்லை. தாவா பாண்டுகளில் உள்ள கையெழுத்து

Darkness ஆக உள்ளது மற்ற விவரங்கள் எழுதப்பட்டவை Dull ஆக உள்ளது என்றால் இல்லை.

4. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் பிரதிவாதியிடம் பணம் பறிக்கவே மோசடியான ஆவணம் தயார் செய்து தவறான வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. 31.10.2021ல் ரூ.1 லட்சமும் அதே தேதியில் பிரதிவாதி 40 ஆயிரம் கேட்டு 39 ஆயிரம் கொடுக்கப்பட்டதாக விவரம் சொல்லியிருக்கிறேன் கால அவகாசம் குறித்து தாவாவில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை, ஒரே நேரத்தில் ரூ.1,39,000/- கொடுத்தேன் கடனை எளிதாக திருப்பி தருவதற்காக பிரதிவாதி கேட்டதன் பேரில் ரூ.1 லட்சத்திற்கு ஒரு பாண்டும் ரூ. 39 ஆயிரத்திற்கு ஒரு பாண்டும் எழுதப்பட்டது.